நாம் அனைவரும் – சமூகத்தின் பிரதிபலிப்பு – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/09/25/%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%A9%E0%AF%88%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%9A%E0%AE%AE%E0%AF%82%E0%AE%95%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF/

September 25, 2024

மலடி எனும் சொல்லை பொறுக்க முடியாத அவள், வேப்பமரத்துக்கு அடியில், குத்தவைத்துவிட்டல், பிள்ளை வரம் வழங்கும் அம்மன் என்று.
– பேனா மை

எதுவாக வெளிப்படுகிறோமோ அதுவல்ல நாம்.
எதை மறைக்க விரும்புகிறோமோ அதுவே நாம்.
– பூக்கடைக்காரி

வீதி வீதியாய் சுற்றித் திரிந்து மிச்சம் இருந்த பூவை சொச்சம் விலைக்கு விற்று வீடு திரும்பி அவள் வைத்த மீன் குழம்பில் வீசுகிறது பூ வாசனை.
– க.செந்தமிழ் தாசன்

ஓர் நாள் நடைபிணமாய் திரிவேன், மறு நாளே உயிர்பிழைத்து மழலையாய் மாறி உங்களுடன் சேர்ந்து சிரிப்பேன் நான் என்பதே இவ்வுளவுதான்
– Unknown

எல்லோருக்கும் பாரமாக இருக்கிறோம் எனத் தெரியவரும் போதே பாதையை மாற்றிக்கொள்வது நல்லது.
-வேந்தன் பிரபாகரன்

இனி வாழவே முடியாது என்ற நிலைக்கு சென்ற ஒருவன்தான்…
இதுவரை யாருமே வாழாத வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவான்!!!
– Unknown

ஆயிரம் பேர் ஆயிரம் உதவிகள் வேண்டுமா என்று கேட்கிறார்கள்.
ஒரு குருவிக்குத் தேவை ஒரு பிடி தானியம் ஒரு கிண்ணத்தில் தண்ணீர்…!!!
– மனுஷ்ய புத்திரன்

தனித்திருத்தல் என்றால் என்னவென்று எனக்குத் தெரியாது…
ஆனால் நான் தனித்திருக்கிறேன் என்று மட்டும் எனக்குத் தெரியும்…
– மனுஷ்ய புத்திரன்

அவன் ‘ஒரு மாதிரியான’ ஆள்; பைத்தியம் அல்ல. மகிழ்ச்சி என்பது என்னவென்றே தெரியாத மனிதர்கள், எப்பொழுதும் குஷியாகப் பாடிக் கொண்டே இருக்கும் அவனை ‘ஒரு மாதிரி’ என்று நினைத்தார்கள்.
– ஜெயகாந்தன்

என்னை விட இன்னொன்றை நீ அதிகம் விரும்பினாலோ
என்னை விட்டு இன்னொருவருடன் நீ பழக நினைத்தாலோ
அழகாய் விலகி வழி விடுவேன் தயங்கியெல்லாம் இல்லை மனதாரவே!
– Unknown

அருவருப்பில்லாமல்… அழுகிய குப்பையை கைகளால் தொட்டு… தோளில் சுமந்து செல்லும் துப்புரவு பணியாளனை… தொட்டுவிடாதே… தூரம் செல்..! என்னும் மானுடத்தின் ” அழுக்கான மனமும் ” அவர்கள் வீட்டு குப்பையைப் போன்றே… துர்நாற்றம் வீசுகிறது…!!
– sasi_duraisamy

விளங்குகிறதா உங்களுக்கு?
விதவையை முன்னிறுத்தி செய்யும் காரியங்கள் விளங்காது என்பவர்களே
உங்களை முன்னிறுத்தித்தானே அவளின் முகூர்த்தமே நடந்தது.
– மு. நாகூர் கனி.